பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 18 புதன்கிழமை 02.07.2025 கதிர் 235



இ னி து ரகசியம் அல்ல!

மழை விட்டாலும் தூவானம் ஓயவில்லை என்பதைப் போன்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கட்சிகளுக்குள் எழுந்த பிரச்சினைகள் இன்னமும் ☞ 2

### காணி உரித்துத் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு

# சுமந்திரனின் வழக்கால் நிறுத்தப்பட்டாலும் அரச அலுவலர்கள் மூலமாக தொடர்வோம்

### விவசாய காணி, நீர்ப்பாசன அமைச்சர் தெரிவிப்பு

சுமந்திரனின் வழக்கால் காணி உரித்து தொடர்பான வர்த்தமானி நிறுத்தப்பட்டாலும், அரச உத்தியோகத்தர்கள் ஊடாக வவுனியா மாவட்டத்தில் பொது மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி காணி உரித்து தொடர்பான பிரச்சினைகளை முடிவுக்குக்கொண்டுவருவோம் என விவசாய காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுனில் ரணசிங்கே தெரிவித்தார்.

வவுனியாவில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் ☞ 2

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து ஜூலை 9 விவாதம்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் ஜூலை 9 நடைபெறவுள்ளது. சபை ஒத்திவைப்பு வேளையில் இந்த விவாதம் இடம்பெறும்.

முன்னதாக இந்த விவாதம் இரண்டு நாட்கள் நடைபெறுவதாக இருந்தது. இப்போது ஒரு நாளாகக் குறைக்கப்பட்டது.

நாடாளுமன்ற விவகாரக் குழு, அடுத்த மாதம் 8, 9 மற்றும் 11 ஆகிய நாட்களில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது என்று முடிவு செய்துள்ளது.

## ஊழல் எதிர்ப்பு வழிகளை வலுப்படுத்த ஜப்பான அரசு 2.5 மில். டொலர் உதவி

ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் பொது நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட மூன்று ஆண்டு திட்டத்தை ஆதரிப்பதற்காக ஜப்பான் அரசு இலங்கைக்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) உதவியுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும், மேலும் ☞ 2

# 2 செம்மணி வழக்குகளையும் ஒன்றிணைக்க ஆலோசனை

பழைய செம்மணி புதைகுழி வழக்கும் புதிய செம்மணி புதைகுழி வழக்கும் வேறு வேறு வழக்காக இருந்தாலும் இரண்டு வழக்கையும் தொடர்புபடுத்த வேண்டிய நிலைமை இருப்பதனால் முறையான நீதிமன்ற அனுமதியுடன் குறித்த பழைய செம்மணி வழக்கை புதிய வழக்குடன் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் பாதிக்கப்பட்ட தரப்பில் நடக்கின்றது என சட்டத்தரணி ரணித்தா தெரிவித்தார்.

அவர் செம்மணி மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

செம்மணி மனித புதைகுழி அகழ்வில் ஐந்தரை நாட்கள் முடிவடைந்தது. இன்றைய நாளில் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட பாடசாலை புத்தகப்பையோடு இருந்த மனித உடல் முழுமையாக மீட்கப்பட்டுள்ளது.

அகழ்ந்தெடுக்கும் பொழுது சிறு குழந்தையின் உடலுடன் சப்பாத்து குழந்தை விளையாடும் சிறிய பொம்மை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன.

இன்றைய நாள் முழுவதும் நடந்த அகழ்வுப் பணியில் ஐந்து வரையான மனித எலும்புக்கூடுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. அதனுடைய எண்ணிக்கையை சொல்ல முடியாத ☞ 2

## எரிசக்தி, டிஜிட்டல் பொருளாதாரத்தில் முதலிடுவதில் இந்தியர்கள் ஆர்வம்

### அரசுத் தலைவர் செயலகம் தெரிவிப்பு

இலங்கையின் எரிசக்தி, உள்கட்டமைப்பு, டிஜிட்டல் பொருளாதாரம், சுற்றுலா, விவசாயம் மற்றும் தொழில்முனைவோரின் திறன் மேம்பாடு ஆகியவற்றில் புதிய முதலீட்டு வாய்ப்புகளில் இந்திய தொழில்முனைவோர் கவனம் செலுத்தியுள்ளனர் என்று அரசுத் தலைவர் செயலகம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள முதலீட்டு வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துதல் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, இந்திய கைத்தொழில் சம்மேளனத்தின் (சீஐஐ) ஒருங்கிணைப்பின் கீழ் பல முக்கிய இந்திய நிறுவனங்களின் பிரதானிகள் உட்பட சுமார் 20 இந்திய தொழில்முனைவோர் குழு எமது நாட்டில் செயற்பாட்டிலுள்ள திட்டமொன்றில் பங்கேற்கிறது. இந்தக் குழு நேற்று பிற்பகல் அரசுத் தலைவர் அலுவலகத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்த போது இவ்வாறு தெரிவித்தது.

இந்தியாவிற்கு அண்மையில் மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் ☞ 2

## செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து சிறுவர் விளையாடும் பொம்மை

செம்மணி மனித புதைகுழி ஒன்றினுள் இருந்து சிறுவர்கள் விளையாடும் சிறு பொம்மை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

செம்மணிமனிதபுதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வு பணியின் ஆறாம் நாள் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்ட சிறு பிள்ளையின் எலும்புக்கூடு அகழ்ந்து எடுக்கப்பட்டது. அந்த எலும்புக்கூட்டுடனேயே நீல நிறத்திலான ஆங்கில மற்றும் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பையும் காணப்பட்டது. அதுவும் மீட்கப்பட்டது.

பை மீட்கப்பட்ட அது குழியில் ☞ 2

## போக்குவரத்துத் துறை முன்னாள் ஆணையர் ஊழல் தடுப்பு ஆணையகத்தால் நேற்று கைது

### மேலும் இருவரும் கூடவே கைது

மோட்டார் போக்குவரத்துத் துறையின் முன்னாள் ஆணையர் ஜெனரல் நிஷாந்த அனுருத்த வீரசிங்க உட்பட மூன்று பேர் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தால் (CIABOC) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை சுங்கத்தால் விடுவிக்கப்படாத ஒரு வாகனத்தின் சட்டவிரோத பதிவு தொடர்பான விசாரணை தொடர்பாக இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

டொயோட்டா வகை எஸ்.யு.வி. (SUV) ரக வாகனத்தை சட்டவிரோதமாக அங்கீகரித்துப் பதிவு செய்ததற்காக சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. வாகனத்திற்கான பதிவு எண்ணை சட்டவிரோதமாக வழங்குவதற்கு ☞ 2

## ஹெல்மெட்டின் தரத்தில் ஆளும்தரப்பு கவனம்

### அதை மேம்படுத்துவது குறித்து ஆராய்வு

மோட்டார் சைக்கிள் விபத்துகளால் ஏற்படும் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகளைக் குறைக்கும் முயற்சியில், ஹெல்மெட் தரநிலைகளில் கடுமையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த இலங்கை ஆளும்தரப்பு தயாராகி வருகின்றது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவித்தார்.

மக்கும்புர விரைவுச்சாலை ☞ 2

### இறக்குமதி செய்து தருவதாகச் சொன்ன

## எரிபொருள் விலை சூத்திரத்தை மாற்றும் வாக்குறுதி பொய்த்தது

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சாடல்

எரிபொருள் விலை சூத்திரத்தை மாற்றி, துறைமுகத்தில் தரையிறக்கப்பட்ட அதே விலையில் நுகர்வோருக்கு எரிபொருள் வழங்குவதாக அறிவித்த தற்போதைய ஆளும்தரப்பு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பில் தெரிவித்தார். ☞ 2

## இனி இது .....

ஒய்ந்தபாடில்லை.

உள்ளூராட்சி சபைகளுக்கு தான் விரும்பியவர்களைத் தலைவராக்க முடியவில்லை என்ற வருத்தத்தில், முல்லைத்தீவு மாவட்டக் கிளைச் செயலாளர் பதவியிலிருந்து ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் விலகியிருந்தார். அங்குள்ள சபைகளில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவளித்த மற்றக் கட்சிகள் அவரது ஆதரவாளர்களை விரும்பாததன் காரணமாக ஏற்பட்ட ஏமாற்றத்தை அவர் இந்த வகையில் வெளிப்படுத்தியிருந்தார்.

இப்போது மன்னார் மாவட்டத்திலும் இதேபோன்றதொருநிலை. அங்கும் மாவட்டக் கிளைப் பொருளாளர் தனது பதவியிலிருந்து விலகுகிறார் என்று கட்சியின் பொதுச் செயலாளருக்கு அறிவித்திருக்கின்றார். மன்னார் மாவட்டக் கிளையின் பொருளாளர் பரஞ்சோதி. அவர் எழுதியுள்ள கடிதத்தில் மாவட்டத்தலைமையின்மீதானஅதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். மன்னார் மாவட்டத்தில்ஒருஉள்ளூராட்சிசபையைக்கூட கட்சி கைப்பற்ற முடியாமல் போனமைக்கு மாவட்டத் தலைமையே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கில் மன்னார் மாவட்டத்தில் மட்டுமே தமிழ் அரசுக் கட்சியின் வசம் ஒரு சபைகூட இல்லை. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அனைத்துச் சபைகளையும் தமிழ் அரசுக் கட்சியே கைப்பற்றியிருந்தது. யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் சில சபைகளை இழந்தாலும் பல சபைகளைக் கைப்பற்றி இருந்தது. அந்த வகையில் பார்க்கும்போது மன்னார் மாவட்டத்தில் கட்சி அடைந்திருப்பது படுதோல்விதான்.

கட்சியின் கொள்கைக்கு மாறாக தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியைப் பிடிக்கலாம்என்றுமாவட்டத்தலைமைஎடுத்த தவறான வழியே இந்தத் தோல்விக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. தமிழ் அரசுக்கட்சியின்மன்னார்மாவட்டத்தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன். தேசிய மக்கள் சக்தியின் மன்னார் வேட்பாளர்களாக இம்முறை களமிறங்கி வெற்றி பெற்றிருந்த பலரும்கூடஅவரதுமுன்னாள்ஆதரவாளர்களே என்று கூறப்படுகின்றது. அதனால்தான் அவர்களுடன் சேர்ந்து ஆட்சியமைக்க அவர் முயற்சித்தார். ஆனால், அவர்கள் தமது கட்சித் தலைமையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு தமிழ் அரசின் காலை வாரிவிட்டு ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியோடு கைகோர்த்துக் கொண்டார்கள்.

இந்த விவகாரம் தொடக்கம் முதலே கட்சித் தலைமைக்கு உறுத்தலாகவும் கட்சிக் கொள்கைக்கு எதிராக நகர்வாகவும் இருந்து வந்தது. இப்போது மாவட்டத்தின் பொருளாளர் கட்சி மாவட்டத்தில் அடைந்த தோல்விக்கு தமது தலைமையின் தவறே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளதுடன் தானும் அதற்குப் பொறுப்பேற்று பதவி விலகுகிறார் என்று அறிவித்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர், முன்னாள் மாவட்டத் தலைவர், நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் என்ற வகையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் பொருளாளர் பதவியிலிருந்து நான் விலகுகின்றேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டத் தலைமை கடந்த தேர்தலில் தன்னிச்சையாகச் செயற்பட்டதுடன், உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அலட்சியமாகச் செயற்பட்டமை, கட்சிக்கும் மன்னார் மாவட்டத்திற்கு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தற்போதைய மாவட்ட தலைமையுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் பல்வேறு வகையான விமர்சனங்கள் மற்றும் எதிர்ப்புகள் எழுந்துள்ளதால், தோல்வி மற்றும் பின்னடைவுக்கு தார்மீக பொறுப்பேற்று, பொருளாளர் பதவியில் இருந்து விலகுகிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளைத் தலைவருக்கும் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கட்சிக்குள் தனக்கு எதிர்ப்பு வலுப்பதை அடுத்து தானும் கட்சிப் பதவிகளில் இருந்து விலகுவதற்கு எண்ணியுள்ளார் என்று சார்ள்ஸ் நிர்மலநாதனும் சில கதைகளைப் பரவவிட்டுள்ளார். அவரைத் தொடர்புகொண்ட சிலஊடகங்களிடம்அவர்அப்படித்தெரிவித்தார் எனச் செய்திகள் வந்துள்ளன. ஆனால், அது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்று தெரியவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுடனேயே தான் இனித் தேர்தலில் போட்டியிடப்போவதில்லைஎன்றுதெரிவித்தவர் அவர், இருந்தாலும் இந்தத் தேர்தலில் தனது மாவட்டத் தலைவர் என்ற அதிகாரத்தை முழு அளவில் பயன்படுத்துவதில் மும்முரமாக இருந்தார். எனவே அவர் இலகுவில் பதவி விலகுவார் என்று எதிர்பார்க்க முடியாது. அதேநேரம் கட்சித் தலைமை அவர் தொடர்பில் என்ன முடிவெடுக்கப் போகின்றது என்பதைப் பொறுத்தே அவரது எதிர்காலம் இருக்கப் போகின்றது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 2 செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது.

பழைய செம்மணிப் புதைகுழி வழக்கு நடவடிக்கையில்ஈடுபட்டபிரதானசட்டவைத்திய அதிகாரி அகழ்வு நடந்த பிரதேசத்திற்கு இன்று வருகை தந்தார். தற்போது அகழ்வு பணியில் ஈடுபடும் சட்ட வைத்திய அதிகாரியோடு பேசி கடந்த அகழ்வுபணி தொடர்பான தகவல்களை வழங்கியிருந்தார்.

பழைய செம்மணி வழக்கும் புதிய செம்மணி வழக்கும் வேறு வேறு வழக்காக இருந்தாலும் இரண்டு வழக்கையும் தொடர்புபடுத்த வேண்டிய நிலைமை இருப்பதனால் முறையான நீதிமன்ற அனுமதியுடன் குறித்த பழைய செம்மணி வழக்கை புதிய வழக்குடன் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை பாதிக்கப்பட்ட தரப்பு செய்வதற்கான ஆலோசனை நடக்கின்றது.

ஏற்கனவே தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா குழுவினரால் அடையாளப்படுத்தப்பட்ட சந்தேகத்துக்கிடமான பகுதிகள் நீதிமன்ற அனுமதிக்கமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுடைய தொல்லியல் துறை மாணவர்களின் உதவியுடன் நல்லூர் பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் தற்போது துப்பரவாக்கப்பட்டு பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டிருக்கிறது என்றார்.

## சுமந்திரனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் காணி பிரச்சினைகள் நிறையவே இருக்கின்றது. ஒரு புறத்தில் மக்களுடைய காணிக்கான உரித்து இழக்கப்பட்டிருக்கிறது. மறுபுறம் காணிகளை பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் படையினராலும், பாதுகாப்புத் தரப்பாலும், வனவளத் திணைக்களத்தாலும் கையகப்படுத்தப்பட்ட காணிகளும் காணப்படுகின்றன. இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் கலந்துரையாடி அந்தக் காணிகளை மக்களுக்கு மீள வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு உள்ளோம்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி விவசாய காணிகளில் பெரும் பகுதியானவற்றை விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம். ஏற்கனவே அவை வனவளத் திணைக்களத்திற்குரித்தானதாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் விவசாயிகளுக்காக அதனை மீள வழங்குவதற்கு வனவள திணைக்களம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரம் ஏக்கர் காணிகள் மீளபொதுமக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவரை காலமும் எம்மிடம் விவசாயம், கால்நடை, காணி விடயங்களை உள்ளடக்கி ஒன்றிணைந்த வேலைத்திட்டம் இருக்கவில்லை. தற்போது அது உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இனி வரும் காலங்களில் ஒன்றிணைந்த வேலைத்திட்டமாக இதனை கொண்டு செல்வதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

வவுனியாவில் 40 வீதமானவர்கள் வறுமைக்குட்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாக இருந்தால் உற்பத்தி பொருளாதாரம் மேம்பட வேண்டும். நாங்கள் இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது வறுமையை இல்லாது ஒழிப்பதற்காகவே. வவுனியா மாவட்டத்திற்காக முன்னெடுக்கப்படும் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் தான் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வவுனியா மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படும்.

வட மாகாணத்தில் உள்ள கணி உரித்து தொடர்பாக நாங்கள் ஒரு விசேட வர்த்தமானி ஒன்றினை வெளியிட்டு இருந்தோம். ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரனால் வழக்குதாக்கல் செய்யப்பட்டு அந்த வர்த்தமானி தற்போது கைவிடப்பட்டிருக்கிறது.

எனினும் நாங்கள் அரச உத்தியோகத்தர்கள் ஊடாக வவுனியா மாவட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி காணி உரித்து தொடர்பான பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் எனத் தெரிவித்தார். (100)

## போக்குவரத்துத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரசிங்கவே ஒப்புதல் அளித்தார் எனவும் கூறப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் உதவி இயக்குநர் பிரியந்த பண்டார எரியகம மற்றும் தம்மிக நிரோஷன் என்ற எழுத்தர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். பதிவு செய்வதற்கு உதவும் சட்டவிரோத தரவு உள்ளீட்டு செயல்முறையை எளிதாக்கியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆணைக்குழு அதிகாரிகள் நேற்று (ஜூலை 1) மூவரையும் கைது செய்தனர், மேலும் அவர்கள் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹெல்மெடின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுழைவாயிலில் நடைபெற்ற பொது விழிப்புணர்வு நிகழ்வின்போது பேசிய அமைச்சர் ரத்நாயக்க, நாட்டில் பெரும்பாலான சாலை இறப்புகளுக்கு மோட்டார் சைக்கிள் தொடர்பான விபத்துகள் தொடர்ந்து காரணம் என்று குறிப்பிட்டார்.

'இந்தப் போக்கைக் கருத்தில் கொண்டு, ஹெல்மெட் தரம் குறித்த புதுப்பிக்கப்பட்ட விதிமுறைகளை செயல்படுத்துவதில் நாங்கள் இப்போது பணியாற்றி வருகிறோம்' என்று அவர் கூறினார், மேலும் பாதுகாப்பு தரநிலைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக ஆளும்தப்பு விரைவில் ஹெல்மெட் உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தும் என்றும் கூறினார்.

சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் உயிர்களைப் பாதுகாப்பதற்கும் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக ஹெல்மெட் தரத்தை மேம்படுத்துதல் உள்ளது என்று அமைச்சர் வலியுறுத்தினார். சாலைகளில் ஏற்படும் ஆபத்தைக் குறைப்பதற்கு முச்சக்கர வண்டிகளில் அதிகபட்ச பயணிகள் திறன் குறித்த தற்போதைய சட்டங்களை அமல்படுத்துவது மிக முக்கியமானது என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

## எரிசக்தி, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பின் பேரில் இந்தக் குழு இலங்கை வந்துள்ளது. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுடனும் இலங்கை முதலீட்டுச் சபை போன்ற முன்னணி அரசு நிறுவனங்களுடன் அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை முதலீட்டாளர்களுக்கு மிகவும் உகந்த சூழலை உருவாக்கியுள்ளது என்று அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் சிறந்த பொருளாதார நிலைமை மற்றும் முதலீட்டிற்கு உகந்த சூழலை உருவாக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து இந்திய தொழில்முனைவோருக்கு அரசுத் தலைவர் விளக்கினார். பெருமளவிலான முதலீடுகளைத் தக்கவைத்து அவற்றைப் பராமரிக்க தேவையான சட்ட கட்டமைப்பும், நிறுவன கட்டமைப்பும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் முதலீடுகளில் வீண் விரயம் மற்றும் ஊழலைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறிப்பாக பிராந்திய முதலீட்டாளர்களை எளிதாக ஈர்ப்பதற்கும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பல துறைகளில் புதிய வணிக வாய்ப்புகளுக்கு வாய்ப்புள்ளதாகவும் அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் மூலோபாய இருப்பிடம் முதலீட்டாளர்களிடமிருந்து வலுவான ஆர்வத்தை ஈர்த்துள்ளது என்று கூறிய இந்திய தொழில்முனைவோர், இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து அரசுத் தலைவரின் தெளிவுபடுத்தலைப் பாராட்டியதோடு அது அவர்களுக்கு ஊக்கத்தையும் புதிய நம்பிக்கையையும் அளித்துள்ளது என்றும் கூறினர்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, அரசுத் தலைவரின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள், இந்திய கைத்தொழில் சம்மேளனத்தின் (CII) முன்னாள் தலைவரும் ITC லிமிடெட் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சஞ்சீவ் பூரி மற்றும் பல முன்னணி இந்திய நிறுவனங்களின் பிரதானிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## எரிபொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான கமிஷன் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதா, எரிபொருள் மீதான வரி நீக்கப்பட்டுள்ளதா என்பதை மக்கள் அறிய விரும்புகிறார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் எரிபொருள் விலை உயர்வு தொடர்பாகப் பேசுகையில், பலவீனமான, திறமையற்ற, பொய் மற்றும் ஏமாற்றும் தற்போதைய அரசாங்கத்தின் போக்கில் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

சர்வதேசத்தின் 4ஆவது தவணையைப் பெறுவதற்கான நிபந்தனைகளை அமல்படுத்துமா என்பதில் சிக்கல் இருப்பதாகவும், எண்ணெய் விலை அதிகரிப்பின் அடிப்படையை அறிய விரும்புவதாகவும் பிரேமதாச குறிப்பிட்டார்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தே சிறு பிள்ளைகள் விளையாடும் பொம்மை ஒன்றும் சிறு பிள்ளையின் காலணி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. பெண் பிள்ளைகள் அணியும் காலணியை ஒத்ததாக அது காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை நேற்று முன்னெடுக்கப்பட்ட மேலதிக பணிகளின் போது மேலும் மனித எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை ஒன்றுடன் ஒன்று பின்னி பிணைந்து காணப்படுவதால், அவற்றின் எண்ணிக்கைய என்ன என்பதை உடனடியாகக் கூறமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையில் 33 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## ஊழல் எதிர்ப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான நிறுவன திறனை மேம்படுத்துதல், பொது நிர்வாகம் மற்றும் முதலீடுகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் பயனுள்ள வழக்குத் தொடுப்பு மற்றும் பொது பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகத்தில், இலங்கைக்கான ஜப்பானிய தூதர் அகியோ இசோமாட்டா மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா ஆகியோருக்கு இடையே நீதி அமைச்சர் ஹர்ஷநாணயக்கார முன்னிலையில் நேற்றுக் காலை இது தொடர்பான ஒரு முறையான ஒப்பந்தம் கையெழுத்தானது.

நிறுவன ஊழலைத் தடுப்பதற்கான நிர்வாக வழிமுறைகளை வலுப்படுத்துதல், விசாரணை நடைமுறைகளை மேம்படுத்துதல், பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல், குடிமக்களை அதிகாரம் அளித்தல் மற்றும் ஊழல் வழக்குகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளின் தரத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் இந்த முயற்சி கவனம் செலுத்தும். ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில், குறிப்பாக இளைஞர்கள், ஊடக வல்லுநர்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் குடிமை ஈடுபாட்டை ஊக்குவிக்கவும் இந்த திட்டம் முயல்கிறது.

சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க, அரசுத் தலைவர் செயலாளர் நந்திக சனத் குமாரநாயக்க, நீதி அமைச்சின் செயலாளர் ஆயிஷா ஜினதாச, மற்றும் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் ஆணையர்கள், ஜப்பானிய தூதரகம் மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கிய அரசாங்க அதிகாரிகள் கைச்சாத்து விழாவில் கலந்து கொண்டனர்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கை மீட்புப் பாதையில் பொறுப்புணர்வின் அவசியம்

இலங்கை, வரலாற்றிலேயே இல்லாத மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட நிலையில், சர்வதேச நாணய நிதியம் (IMF) வழங்கிய நான்காவது தவணை நிதி உதவி, மீட்பு முயற்சிகளுக்கான முக்கியக் கட்டமாக yesterday (ஜுன் 30) அமையப்பெற்றது. இந்த உதவித் தொகை, ரூ.3.3 பில்லியன் அமெரிக்க டொலர்களில் ஒரு பகுதியாகவுமே தற்போது கிடைக்கவிருக்கிறது. பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளமை, இலங்கையின் தற்போதைய பொருளாதார மேலாண்மை, சீர்திருத்த முயற்சிகள் குறித்து ஒரு வகையான சர்வதேச அங்கீகாரமாகவும் பார்க்கப்படுகிறது.

இம்மாதிரி நிதி உதவிகள் நாட்டின் வெளிவிவகார நம்பிக்கையை கட்டியெழுப்பும் ஒரு வழியாகும். கடனளிப்பாளர்கள், முதலீட்டாளர்கள், மற்றும் சர்வதேச வர்த்தகக் கூட்டமைப்புகள்—all look to IMF's approval as a symbol of trust. எனவே இந்த நான்காவது தவணை நிதி வழங்கப்படுவதை எதிர்வரும் நாட்களில் பங்கு சந்தை நிலைத்தன்மை, நிதிச் சுழற்சி, மற்றும் கட்டுப்பாடான பணவீக்கத்தில் ஒரு நம்பிக்கைக்கருவியாகக் காணலாம்.

ஆனால், இந்த நிதியை நாட்டிற்குப் பயன்படும் வகையில் பயன்படுத்துவது என்பதே இப்போது அரசின் மிகப்பெரிய பொறுப்பாக உள்ளது. கடந்த காலத்தில் ஹுானிய் நிதி உதவிகள் பெறப்பட்டபோதும், அவை மக்கள் வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாத வரலாறும் உண்மை. உண்மையில், பன்னாட்டு நிதி அமைப்புகள் வழங்கும் நிதி தொகைகள், பொதுவாகக் கொள்கைமுறை சீர்திருத்தங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் நிதிச்சார்ந்த ஒழுங்குமுறைகளுடன் இணைக்கப்பட்டவையாகவே இருக்கும்.

இந்தச் சூழலில், அரசின் நிதிச்செலவுகளும் முக்கியமாக கண்காணிக்கப்பட வேண்டியவை. சுகாதாரம், கல்வி, விவசாயம் போன்ற அடிப்படைத் துறைகளுக்கான ஒதுக்கீடுகளை குறைத்து, கடன் செலுத்தல் அல்லது நிர்வாக வீண்செலவுகளுக்கு நிதியை மாற்றிச் செலுத்தும் சாத்தியக்கூறுகள் உள்ளது. இது மக்கள் வாழ்வாதாரத்திற்கு எதிரான நடவடிக்கையாகவே அமையும்.

அதே நேரத்தில், இந்த நிதியை இலங்கை அரசு ஏற்கனவே மேற்கொண்டிருக்கும் பொருளாதார சீர்திருத்தங்களின் தொடர்ச்சியாகக் காண வேண்டும். நிலையான வருமானங்களை உருவாக்கும் திட்டங்கள் – கொள்முதல் மேலாண்மை, வரிவிதிப்பில் பாரபட்சம் இல்லாத அணுகுமுறை, மற்றும் ஊழலை ஒழிக்கும் நிர்வாகப் படிநிலைகள் ஆகியவை இந்நேரத்தில் முக்கியத்துவம் பெற வேண்டும்.

மாற்றுத்திறனான புறநாணயக் கொள்கைகள், சுற்றாடல் பொருளாதாரங்களுடன் புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் தேசீய உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் திட்டங்கள் மூலம் இலங்கை தன்னிறைவு நோக்கி நகர வேண்டும். இது குறுகிய கால நிவாரணத்தைத் தாண்டி, நீண்டகால நம்பகத்தன்மையை ஏற்படுத்தும்.

முடிவாக, IMF உதவி என்பது இலங்கைக்கு ஒரு வாய்ப்பு மட்டுமே. அதை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம். மக்கள் வாழ்க்கையின் அடித்தளத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொது நலனுக்காகவும், பொருளாதார நீதிக்காகவும் இந்த நிதியை ஒழுங்காக செலுத்தும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அவ்வாறு மேற்கொள்ளும் செயல்திட்டங்கள் மட்டுமே நமது நாட்டு நம்பிக்கையை மீட்டெடுக்க வழிவகுக்கும்.

நிதிவந்துவிட்டது. ஆனால் நம்பிக்கைபெற, நம்பிக்கையை நிலைநாட்ட– அது எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதையே உலகம் பார்க்கும்.

# வவுனியா இளைஞனை தாக்கி 50 ஆயிரம் ரூபா பணம் பறிப்பு

## யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மூவர் கைது

வவுனியா இளைஞன் ஒருவரை தாக்கி அவரிடம் இருந்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பறித்து சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிசார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட மூவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து இந்தக் குற்றத்தைப் புரிந்தார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மூவர் கார் ஒன்றில் வெள்ளிக் கிழமை வவுனியாவிற்கு வந்து வவுனியா, புதிய பேரூந்து நிலையம் முன்பாக நின்ற வவுனியா இளைஞன் (வயது 18) ஒருவரை காரில் கடத்திச் சென்று குடியிருப்பு குளக்கட்டு பகுதியில் வைத்து தாக்கியுள்ளனர். அவரது வங்கி அட்டையை பறித்து அதிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் எடுத்துவிட்டு தாக்குதலுக்குள்ளான இளஞனை மீண்டும் காரில் ஏற்றிவந்து புதிய பேரூந்து நிலையம் முன்பாக இறக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர். யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 19, 21 வயது இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் என்று பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

(100)

# விபத்துக்களால் ஏற்படும் சாவுகளை குறைக்க அனைரும் ஒத்துழைக்குக

## போக்குவரத்து அமைச்சர் வேண்டுகோள்

விபத்துக்களால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களை கட்டுப்படுத்தச் சகலரும் ஒத்துழைப்பு வழங்கு வேண்டும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்து தரிப்பிடங்களுக்கு நேற்றுச் சென்று பேருந்து சாரதிகள் ஆசனப்பட்டியை அணிந்திருக்கின்றனரா என்று அமைச்சர் கண்காணிப்பில் ஈடுபட்டார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

2011ஆம் ஆண்டு இலகு மற்றும் கனரக வாகனங்களில் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் பேருந்து மற்றும் லொறி சாரதிகளுக்கு இது கட்டாயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, கடந்த 3 மாதங்களாக இது தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, இந்த நடவடிக்கை தற்போது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள் மாத்திரமின்றி, பின் இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்களும் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்படவுள்ளது.

வீதி விபத்துக்களின்போது அதிக இறப்புக்கள் பதிவாகுவதற்கும் இது ஒரு பிரதான காரணியாக உள்ளது. ஆசனப்பட்டிகளை அணிவதால் பெருமளவான இறப்புக்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

இலகுரக வாகனங்களிலும் பின் இருக்கைகளில் பயணிப்பவர்கள் ஆசனப்பட்டிகளை அணிந்தால் விபத்துக்கள் இடம்பெற்றாலும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆசனப்பட்டி அணியாதவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பது ஆளும்தரப்பின் நோக்கம் அல்ல. அவதானத்துடன் பயணித்து, விபத்துக்களால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

எனவே, ஆசனப்பட்டி அணிதல் தொடர்பில் இனி தீவிர கண்காணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது. சில இடங்களில் ஆசனப்பட்டிகள் மறைக்கப்படுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வாறானவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வேட்டைக்காரர்கள் தொடர்பில் முறையிட தொலைபேசி எண்

சட்டவிரோதமாக வன விலங்குகளை வேட்டையாடுபவர்கள் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்கு 1992 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு வனஜீவராசிகள் பாதுகாப்புதிணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அவசர தொலைபேசி இலக்கமானது 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என வனஉயிரிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வன விலங்குகளை வேட்டையாடப்படுவதை கட்டுப்படுத்துவதற்காக இந்த அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வன விலங்குகளை வேட்டையாடுபவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 1992 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு வனஉயிரிகள் பாதுகாப்பு திணைக்களம் மேலும் தெரிவித்தள்ளது.

### சிஐடி பணிப்பாளராக

# ஷானியின் நியமனம் அரசியல் மயப்பட்டது

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ஷானி அபேசேகர குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் (சிஐடி) பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை முற்றுமுழுதாக ஆளும்தரப்பு அதன் தேவைக்காக முன்னெடுத்துள்ள ஒரு நடவடிக்கையாகும். குறித்த நபர் மீதான நம்பிக்கைக்கு அப்பால் அவர் நியமிக்கப்பட்டுள்ள முறைமை அவர் எடுக்கும் ஏதேனுமொரு நடவடிக்கை மீது சந்தேகத்தையே ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு மக்களின் எதிர்பார்ப்புக்களை மீறி அதிகாரத்துக்காக மாத்திரமே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்சி அமைப்பதற்கு முன்னர் மக்களின் வாழ்வாதாரம், ஊழல், மோசடிகள் தொடர்பில் பெரிதாகப் பேசினர். பொருளாதாரத்தை மிகக் குறுகிய காலத்துக்குள் கட்டியெழுப்புவதாகவும் கூறினர். ஆனால், 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும், எந்தவொரு வாக்குறுதியையும் ஆளும்தரப்பு நிறைவேற்றவில்லை.

உள்நாட்டு விவகாரம் ஒரு புறமிருக்க சர்வதேச மோதல் நிலைமைகள் தொடர்பிலும் இந்த ஆளும்தரப்பு அக்கறையின்றி செயற்பட்டு வருகிறது. அவற்றால் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கும் எந்தவொரு தெளிவான கொள்கையும் ஆளும்தரப்பிடம் இல்லை. அரசியல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக்கொண்டிருக்காமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை ஆளும்தரப்பு முன்னெடுக்கவேண்டும்.

ஆளும்தரப்பின் மீது விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டிருப்பதற்கு நாம் விரும்பவில்லை. ஆனால் ஆளும்தரப்பு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் அதனை சுட்டிக்காட்ட வேண்டியது பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் எமது கடமையாகும். ஓய்வுபெற்ற ஷானி அபேசேகரவை அரசியல் ரீதியாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக நியமித்துள்ளமை தொடர்பிலேயே விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஷானி அபேசேகர என்பவர் குறிப்பிட்ட காலத்தில் மிகவும் சிறப்பாக சேவையாற்றிய அதிகாரி ஆவார். எனவே, அவரது பணிகள் தொடர்பில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால், அவரது நியமனத்தை அரசியல் நியமனமாக இந்த ஆளும்தரப்பு மாற்றியுள்ளது. முதலாவது காரணி அவர் ஓய்வுபெற்ற அதிகாரி ஆவார். அது மாத்திரமின்றி தேர்தல் காலத்தில் அவர் தேசிய மக்கள் சக்தியின் பரப்புரை மேடைகளில் ஏறியிருக்கிறார். எனவே, அவரால் எடுக்கப்படும் ஏதேனுமொரு நடவடிக்கை பொது மக்களால் சந்தேகத்துடனேயே பார்க்கப்படும்.

ஷானி மீதான நம்பிக்கையின்மை என்பதற்கு அப்பால், அவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட முறைமையே கேள்விக்குரியதாகக் காணப்படுகிறது. எனவே இதுபோன்ற விடயங்களில் ஆளும்தரப்பு இன்னும் ஆழமாக சிந்தித்துச் செயற்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றார்.

# குற்றத்தை ஏற்றுக்கொண்ட அதிகாரி

இணையவழி விசா (ஈ-ாஷ்விழி) முறைமையை இடைநிறுத்தல் தொடர்பான உயர் நீதிமன்ற உத்தரவை அவமதித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய நேற்று உயர் நீதிமன்றத்தில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து, அவருக்கான தண்டனை ஜூலை 24 அறிவிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய, இணையவழி விசா முறைமையை இடைநிறுத்தி வைக்குமாறு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

# நல்லூர் பிரதேச சபை ஊழியர் மின்சாரம் தாக்கியதில் காயம்

யாழ்ப்பாணத்தில் வீதி மின்விளக்கினை பழுது பார்த்துக்கொண்டிருந்த நல்லூர் பிரதேச சபை ஊழியர் ஒருவர் மின்சார தாக்குதலுக்கு இலக்கான நிலையில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கொக்குவில் சந்தையை அண்மித்த பகுதியில் செவ்வாய்க்கிழமை (01) காலை, வீதி மின்விளக்குகளை பழுது பார்த்துக்கொண்டிருந்த வேளை மின்சாரம் தாக்கியுள்ளது.

மின்சார தாக்குதலுக்கு உள்ளான ஊழியரை சக ஊழியர்கள் மீட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2025இல் வெளியிடப்பெற்றது